[7th November 1966]

ரூ. 68,000. தஞ்சை ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 1,28,500. செலவானது ரூ. 1,28,674. இராமனாதபுரம் ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 49,200. செலவிட்டது ரூ. 30,000. திருச்சி ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 12,000. செலவிடப்பட்ட விவரம் ஒன்றும் இல்லை. மதுரை ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 66,500. செலவிட்டது ரூ. 2,700. திருநெல்வேலி ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 24,000. தொகை செலவிடப்படவில்லை. செங்கற்பட்டு ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 37,700. செலவிடப்பட்டது ரூ. 37,200. நீலகிரி ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 62,000. அது செலவாகவில்லை. கன்யாகுமரி ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 7,500. செலவிடப்பட்டது ரூ. 7,500. கோயமுத்தூர் ஜில்லாவிற்கு அனுமதிக்கப்பட்டது ரூ. 1,80,000. செலவிடப்பட்டது ரூ. 57,500.

திரு. சா. கணேசன் : பர்மாவில் பணி செய்யச் சென்றவர்களும், அங்கிருந்து திரும்பி வருகிறவர்களும் மிகக் கணிசமான தொகையுள்ள ஜில்லா, இராமனாதபுரம் ஜில்லாவாகும். அப்படியிருக்க— பிற மாவட்டங்களுக்குக் கொடுத்ததைப்பற்றி, சாங்ஷன் செய்ததைப்பற்றி நான் குறை கூறவில்லை—இராமனாதபுரம் மாவட்டத்திற்குச் சுமார் 49,000 ரூபாய்தான் இதற்காகச் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஓரளவுதான் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது எந்த அளவிற்குப் போதும் அல்லது பூரணமாக அவர்களுடைய துயரத்தைத் துடைப்பதற்கு அல்லது வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு உதவும் என்பதைக் கருதி, இந்தத் தொகையை அங்கே அதிகப்படுத்தி, வளத்தைப் பெருக்க அரசு முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமையா : பர்மாவிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு எத்தனையோ திட்டங்கள் அடிப்படையில் உதவி செய்கிறோம். இராமனாதபுரம் மாவட்டத்தில் நிலம் கொடுப்பது, கிணறு தோண்ட உதவி செய்வது, போன்றவற்றில் கவனம் செலுத்துகிறோம். பெட்டிக் கடை கட்டுவதற்காக முனிசிபாலிடிகளுக்கும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் கடன் கொடுக்கிறோம். முனிசிபாலிடிகளும் நகரப் பஞ்சாயத்துக்களும் இந்தத் தொகையை வாங்கிப் பெட்டிக் கடைகள் கட்டிக் கொடுப்பதற்கு முன் வந்தால், அந்தப் பணம் பூராவையும் கொடுக்க முடியும். மேலும் தேவைப்பட்டாலும் கொடுக்கலாம். அவர்கள் முன் வரவில்லையென்றால், அதற்கு நாம் என்ன செய்வது ?

* 415 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா, சிதம்பரம் தாலுகாவில் குடியேறியிருக்கும் பர்மா அகதி குடும்பங்கள் எத்தனை ?

(இ) அவர்கள் எங்கெங்கு குடியேறியிருக்கிறார்கள் ?

(உ) இதுவரை அவர்களுக்கு அளிக்கப்பட்ட, மேலும் அளிக்கப்பட இருக்கும் உதவிகளின் விவரம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 240 குடும்பங்கள்.

(இ) பெரும்பான்மையான குடும்பங்கள் வளையமாதேவி கீழ்பாதி, கிழக்கரை கிராமங்களில் குடியேறிவிட்டனர்.

(உ) —

1. அவர்கள் மறுவாழ்வுக்காக ஏற்கெனவே அளித்துள்ள உதவி விவரங்கள்.

வியாபாரக் கடன் திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ. 1,07,655 வழங்கப்பட்டுள்ளது. பதது குடும்பங்களுக்கு நிலமும் மூன்று பேருக்கு முதியோர் பென்ஷனும் வழங்கப்பட்டுள்ளன. அகதிகளில் ஒருவர் கடைநிலை ஊழியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

II. அவர்கள் மறுவாழ்வுக்காக அளிக்கத் திட்டமிட்டுள்ள உதவி விவரங்கள்.

(1) சிதம்பரம் நகராட்சி மன்றம் பர்மா அகதிகள் வியாபாரம் செய்யும் பொருட்டு பெட்டிக்கடைகளை/கடைகளைக் கட்டத் தொடங்கியுள்ளது. பரங்கிப்பேட்டையிலும் பெட்டிக்கடைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) 43 அகதிக் குடும்பங்களுக்கு வளையமாதேவி கீழ்பாதி கிராமத்தில் வீட்டு மனைகள் ஒதுக்குவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

Free Trade Zone

* 465 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any study is conducted to decide whether Tuticorin can be developed into a Free Trade Zone, for promoting exports made from duty-free imported raw materials and semi-finished goods; and

(b) if so, the conclusions reached as a result thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The suitability for the location of a free trade zone in the Tuticorin area will be considered after the completion of the Deep Sea harbour there.

திரு. எம். எஸ். செல்வராஜன் : துறைமுக வளர்ச்சிக்கு இயல்பாக அந்தத் துறைமுகப் பகுதியில் தொழில்கள் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பது கருத்து. இதுவரை இந்தத் துறைமுகம் சம்பந்தமாக நடந்திருக்கிற வேலைகளின் விகிதத்திற்கு ஏற்ப அந்தப் பகுதியில் தொழில்கள் வளர்ச்சி அடைந்து வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழில்கள் வளர்ச்சிக்கு நிலத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். இதுதான் நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை. ஆனால் ப்ரீ ட்ரேடிங்